| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாடஉள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | 1.6 நுணுக்குக் காட்டியை சரியாகப் பயன்படுத்துவார். | • உயிரியலாளர்களால் பயன்படுத்தப்படும் சில முக்கிய உபகரணங்கள்<br>• எளிய நுணுக்குக்காட்டி<br>• கூட்டு நுணுக்குக்காட்டி<br>• நுணுக்குக்காட்டியின் பிரிவலு, உருப்பெருக்கம் (அறிமுகம் மட்டும்) | **இப்பாட அலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. எளிய நுணுக்குக்காட்டியினதும் கூட்டு நுணுக்குக்காட்டியினதும் பிரதான பகுதிகளை இனங்காண்பார்.<br>2. கூட்டு நுணுக்குக்காட்டியின் வெவ்வேறு பகுதிகளின் தொழில்களை விவரிப்பார்.<br>3. பிரிவலு, உருப்பெருக்கம் ஆகிய சொற்களை விளக்குவார்.<br>4. நுணுக்குக்காட்டியைச் சரியாகப் பயன்படுத்துவார்.<br>5. நுணுக்குக்காட்டியைப் பயன்படுத்தித் தாவர, விலங்குக் கலங்களை சரியாக அவதானிப்பார்.<br>6. நுணுக்குக்காட்டியை கவனமாகப் பயன்படுத்த வேண்டியதன் தேவையை ஏற்றுக் கொள்வார். | 02 | • எளிய, கூட்டு நுணுக்குக் காட்டியைப் பயன்படுத்தி தாவர அல்லது விலங்குக் கலங்களை அவதானிக்க எல்லா மாணவர் களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்.<br>• வரைபடங்கள் காணொளிகள், ஆசிரியர் செய்துகாட்டல் மூலம் கலந்துரையாடி கற்றற்பேறு களை அடைவதற்கு வசதியளித்தல். |
| | 1.7 அங்கிகளின் ஒழுங்கமைப்பு மட்டங்களைத் தேடியறிவார். | • ஒழுங்கமைப்பு மட்டம்<br>• கலம்<br>• இழையம்<br>• அங்கம்<br>• தொகுதி<br>• அங்கி<br>• சமிபாட்டுத் தொகுதி | **இப்பாடஅலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. அங்கி மட்டம் வரை ஆட்சிநிரையில் ஒரு ஒழுங்கமைப்பு உள்ளது என்பதைக் குறிப்பிடுவார்.<br>2. வெவ்வேறு ஒழுங்கமைப்பு மட்டங்களை இனம் காண்பதற்கு மாதிரிகளைப் பயன்படுத்தி அங்கிகளை அவதானிப்பார்.<br>3. வரைபடங்களைப் பயன்படுத்தி மனிதனின் சமிபாட்டுத் தொகுதியின் கட்டமைப்பை | 02 | • வீட்டில் செய்யப்படும் ஒப்படைகள் மூலம் 5ஆம் கற்றற்றை அடைவதற்கு வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1.8 மனிதனின் சமிபாட்டுத் தொகுதி, சுவாசத் தொகுதி என்பவற்றின் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டு இடைத் தொடர்புகளை தேடியறிவார். | • சுவாசத் தொகுதி | விவரிப்பார்.<br>4. வரைபடங்களைப் பயன்படுத்தி மனிதனின் சுவாசத் தொகுதியின் கட்டமைப்பை விவரிப்பார்.<br>5. உணவுக் கால்வாய்த் தொகுதி, சுவாசத் தொகுதி என்பவற்றைக் காட்டுவதற்கான மாதிரியமைப்புகளை அமைப்பார்.<br>6. உயிர் உலகின் ஒழுங்கமைப்பு சிக்கலானது என ஏற்றுக் கொள்வார். | | • மாதிரி உருக்கள், காணொளிகள், ஆசிரியர் செய்துகாட்டல் மூலம் கலந்துரையாடி கற்றற்பேறு களை அடைவதற்கு வசதியளித்தல். |
| | 3.5 வெவ்வேறு சக்தி வடிவங்களின் பயன்பாட்டை விளக்குவதற்கு எளிய செயற்பாடுகளை திட்டமிடுவார். | • சக்தியின் வடிவங்கள்<br>• பொறிமுறை<br>• மின்<br>• ஒலி<br>• ஒளி<br>• வெப்பம்<br>• இரசாயன | **இப்பாட அலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. வெவ்வேறு சக்தி வடிவங்களுக்கு உதாரணங்களை முன்வைப்பார்.<br>2. வெவ்வேறு சக்தி வடிவங்கள் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>3. வெவ்வேறு சக்தி வடிவங்களின் பயன்பாட்டைக் காட்டுவதற்கு எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>4. வெவ்வேறு சக்தி வடிவங்களின் பயன்பாட்டை மெச்சுவார். | 03 | • வீட்டில் செய்யப்படும் ஒப்படைகள் மூலம் 1ஆம், 2ஆம் கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல்.<br>• அனைத்து செயற்பாடு களையும் ஆசிரியர் செய்து காட்டலாக நடாத்தல். |
| | 3.6 நிழல் தோன்றுவது தொடர்பான தோற்றப்பாட்டைச் செய்து காட்டுவார். | • ஒளி<br>• நிழல் தோன்றுதல்<br>• விம்பம் தோன்றுதல் | **இப்பாடஅலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. நிழல் தோன்றுவதன் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விவரிப்பார்.<br>2. தளவாடி, கோளவாடிகளினால் | 04 | • ஆசிரியர் செய்துகாட்டல், கலந்துரையாடல் என்பவற்றின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 3.7 ஆடிகளினால் தோற்றுவிக்கப்படும் விம்பத்தின் இயல்புகளை காட்டுவதற்கு எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார். | • தளவாடி<br>• கோளவாடி | தோற்றுவிக்கப்படும் விம்பங்களின் இயல்புகளை விவரிப்பார்.<br>3. வெவ்வேறு ஆடிவகைகளின் பயன்பாட்டைக் கூறுவார்.<br>4. ஒளி புகவிடாத பொருள்களின் மூலம் ஏற்படுத்தப்படும் நிழல்கள் தோன்றுவதை செய்துகாட்டுவார்.<br>5. தளவாடியில்,கோளவாடியில் தோற்றுவிக்கப்படும் விம்பத்தின் இயல்பை அவதானிப்பதற்குச் செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>6. நிழல் தோன்றுவதும் விம்பம் தோன்றுவதும் வெவ்வேறான தோற்றப்பாடுகள் என ஏற்றுக் கொள்வார். | | மூலம் கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல். |
| | 3.8 ஒலியைப் பிறப்பித்தல், செலுத்துகை தொடர்பான எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார். | • ஒலி<br>• ஒலியின் தோற்றம் (அதிர்வு)<br>• ஒலிச் செலுத்துகை<br>• வேகம்<br>• ஊடகம் | **இப்பாட அலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. அதிர்வினால் ஒலி பிறப்பிக்கப்படுகிறது என்பதை விளக்குவார்.<br>2. ஒலி செலுத்துகைக்கு ஊடகம் அவசியம் என்பதைக் குறிப்பிடுவார்.<br>3. வெவ்வேறு ஊடகங்களில் ஒலியின் வேகம் வேறுபடுவதை விளக்குவார்.<br>4. பொருத்தமான பொருட்களை அதிரச் செய்வதன் மூலம் ஒலியைப் பிறப்பிப்பார்.<br>5. வெவ்வேறு ஊடகங்களில் ஒலி செலுத்துகை வேறுபட்டவை எனக் காட்டுவதற்குச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்துவார்.<br>6. அதிர்வினால் ஒலி பிறப்பிக்கப்படுவதை ஏற்றுக் கொள்வார். ஒலியின் வேகத்தின் மீது ஊடகம்<br>**7.** செல்வாக்குச் செலுத்துவதை ஏற்றுக் கொள்வார். | 02 | • ஆசிரியர் செய்து காட்டல், கலந்துரையாடல் என்பவற்றின் ஊடாக கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 3.9 வெப்பமானியைத் திருத்தமாகப் பயன்படுத்துவார். | • வெப்பமும் வெப்பநிலையும்<br>• வெப்பநிலையை அளத்தல்<br>• வெப்பமானியும், வெப்பநிலையின் அலகும் | **இப்பாடஅலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. பயன்படுத்தப்படும் திரவம், அளவிடை என்பவற்றிற்கேற்ப வெப்பமானியைப் பல வகைகளாகப் பிரிக்கலாம் எனக் குறிப்பிடுவார்.<br>2. வெப்பநிலையை அளக்கும் அலகாக பாகை செல்சியஸ், பாகை பரனைட்டு, கெல்வின் என்பவற்றைக் கூறுவார்.<br>3. கொதிநிலை, உருகுநிலை எனும் பதங்களை விளக்குவார்.<br>4. மனித உடல் வெப்பநிலை மாறிலிப் (37 $^{0}$C) பெறுமானத்தைக் கொண்டது எனவும், காய்ச்சல் நிலைமையை அறிந்து கொள்ள மருத்துவ வெப்பமானி பயன்படுத்தப் படுகின்றது எனவும் குறிப்பிடுவார். | 02 | |
| | 4.1 புவியின் கட்டமைப்பைக் காட்டுவதற்கு மாதிரி ஒன்றை அமைப்பார். | • புவிக்கோள்<br>• புவியின் கட்டமைப்பு | **இப்பாட அலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. புவியின் அகணி, மென்மூடி, புவியோடு என்பவற்றை விவரிப்பார்.<br>2. புவித்தட்டு அசையும் முறையை விவரிப்பார்.<br>3. புவியின் உட்புற அமைப்பை விளக்க எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>4. புவியின் கட்டமைப்பைக் காட்டுவதற்கு மாதிரியொன்றை அமைப்பார்.<br>5. புவித்தட்டின் அசைவை காட்டுவதற்கு எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>6. புவியோடு தொடர்ந்து இயங்கும் என்பதை ஏற்றுக்கொள்வார். | 03 | • மாதிரி உருக்கள், காணொளிகள், ஆசிரியர் செய்துகாட்டல் மூலம் கலந்துரையாடி கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல். |
| | 4.2 வளிமண்டலம் தொடர்பான அறிவை வெளிக்காட்டுவார். | • வளிமண்டலம்<br>• வளிமண்டலத்தின் படைகள்<br>• வளியும் அதன் கூறுகளும் | **இப்பாடஅலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. வளிமண்டலத்தின் படைகளின் வழியே அமுக்கம், வெப்பநிலை என்பன மாறுபடும் முறையை பண்புரீதியில் விளக்குவார்.<br>2. மாறன் மண்டலத்தில் உள்ள வளியின் கூறுகளைக் கூறுவார். (தாழ் வளிமண்டலம்) | 02 | • மாதிரி உருக்கள், காணொளிகள், வரைபடங்கள், ஆசிரியர் செய்துகாட்டல் மூலம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3. வளிமண்டலப் படைகளையும் அவற்றின் சிறப்பியல்புகளையும் வரைபடங்கள் மூலம் காட்டுவார்.<br>4. புவியின் மீது அங்கிகளின் நிலவுகையில் வளிமண்டலத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வார். | | கலந்துரையாடி கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல். |
| | 4.3 மண்ணின் கட்டமைப்பையும் அவற்றின் கூறுகளையும் ஆராய்வதற்கான எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார். | • மண்<br>• வகைகள்<br>• மண்ணின் கூறுகள்<br>• மண் வளி, மண்ணீர், மண் அங்கிகள், உக்கலடையும் பதார்த்தங்கள்<br>• மண்ணரிப்பு | **இப்பாடஅலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. மண் வகைகளைப் பெயரிடுவார்.<br>2. பல்வேறு மண் வகைகளை ஒப்பிட்டு வேறுபடுத்துவார்.<br>3. மண்ணின் கூறுகளைக் கூறுவார்.<br>4. மண்ணின் கூறுகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் விவரிப்பார்.<br>5. மண்ணின் பக்கப்பார்வையின் மாதிரி அமைப்பொன்றை தயாரிப்பார்.<br>6. மண்ணில் வளி, நீர், அங்கிகள், பிரிந்தழியும் பதார்த்தங்கள் காணப்படுவதைக் காட்டுவதற்கு எளிய செயற்பாடுகளை நடாத்துவார்.<br>7. பல்வேறு வகையான மண்ணின் கூறுகளை அவதானிக்க எளிய செயற்பாடுகளை நடாத்துவார்.<br>8. மண்ணரிப்பை காட்டுவதற்கு எளிய செயற்பாடுகளை நடாத்துவார்.<br>9. மண்ணின் கூறுகள், மண்ணரிப்பு என்பன தொடர்பான நிழற்படங்களையும், பத்திரிகைத் துணுக்குகளையும் சேகரிப்பார். | 03 | •வீட்டில் செய்யப்படும் ஒப்படைகள் மூலம் 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல்.<br>•மாதிரி உருக்கள், காணொளிகள், வரைபடங்கள், ஆசிரியர் செய்துகாட்டல் மூலம் கலந்துரையாடி கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல். |
| | 4.4 இயற்கை வளமாக கனியங்கள், பாறைகளின் முக்கியத்துவம் பற்றிய அறிவை வெளிக் காட்டுவார். | • கனியங்களும் பாறைகளும்<br>• சிறப்பியல்புகள்<br>• பாறைகளின் வகைகளும் | **இப்பாடஅலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. பாறைகள் மற்றும் கனியங்களின் சிறப்பியல்புகளை குறிப்பிடுவார்.<br>2. பாறைகளையும் கனியங்களையும் வேறுபடுத்துவார்.<br>3. பாறைகள் வானிலையாலழிதல் | 03 | •வீட்டில் செய்யப்படும் ஒப்படைகள் மூலம் 5ஆம் கற்றற்பேறை அடைவதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கனியங்களும்<br>• பாறைகள் வானிலையாலழிதல்<br>• பாறை வட்டம் | பொறிமுறையை விளக்குவார்.<br>4. பாறை வட்டத்தை விவரிப்பார்.<br>5. வரைபடங்கள், நிழற்படங்களின் துணையுடன் பாறை வட்டத்தை விவரிப்பார்.<br>6. இயற்கை வளமாகக் கனியங்கள், பாறைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.<br>7. கனியங்கள், பாறைகள் என்பவை மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் என்பதையும் அவற்றை பேண்தகு விதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்வர். | | வசதியளித்தல்.<br>• மாதிரி உருக்கள், காணொளிகள், வரைபடங்கள், ஆசிரியர் செய்துகாட்டல் மூலம் கலந்துரையாடி கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல். |
| | 4.5 சக்தி முதல்களை பேண்தகு நிலையில் நீடித்து பயன்படுத்து வதற்கான நடவடிக்கைகளை எடுப்பார். | • சக்தி முதல்கள்<br>• மீளப்புதுப்பிக்கத்தக்க<br>• மீளப்புதுப்பிக்கமுடியாத | **இப்பாடஅலகைக் கற்றபின்னர் மாணவர்கள்**<br>1. மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி முதல்கள், மீளப்புதுப்பிக்கமுடியாத சக்தி முதல்கள் ஆகிய பதங்களை விவரிப்பார்.<br>2. மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி முதல்கள், மீளப்புதுப்பிக்கமுடியாத சக்தி முதல்கள் ஆகியவற்றுக்கு உதாரணங்களை முன்வைப்பார்.<br>3. சக்தி முதல்களின் பேண்தகு பயன்பாட்டின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வார். | 02 | • காணொளிகள், வரைபடங்கள் மூலம் கலந்துரையாடி கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல். |

## விஞ்ஞானம் - தரம் - 8

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாடஉள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1.0 உயிரியற் றொகுதிகளின் பயனுறுதியை மேம் படுத்துவதற்கு, உயிரிமற்றும் உயிர்செயன் முறைகள் பற்றித் தேடிஆய்வார். | 1.1 நுண்ணங்கிகளின் முக்கியத்துவம் பற்றித் தேடி ஆய்வார். | • நுண்ணங்கிகளின் முக்கியத்துவம்<br>• நுண்ணங்கிகளின் தாக்கங்கள் | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. வெற்றுக் கண்ணுக்கு புலப்படாத உயிரிகள் உண்டு என்பதைக் காட்ட எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>2. உணவுப் பண்டங்களின் மீது நுண்ணங்கிகளின் தாக்கங்களைக் கண்டறிய குழுச்செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவார்.<br>3. சில பதார்த்தங்களின் இயல்புகளில் மாற்றங்களை நுண்ணங்கிகள் ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களைத் தேடி ஆய்வார்.<br>4. நுண்ணங்கிகளின் முக்கியத்துவம் பற்றிய தற்காலத் தகவல்களைச் சேகரிப்பார்.<br>5. நுண்ணங்கிகளின் முக்கியத்துவம் பற்றிய தகவல்களை முன்வைப்பார்.<br>6. நுண்ணங்கிகளில் சில நன்மை பயப்பவை என்பதையும், வேறு சில தீமை பயப்பவை என்பதையும் ஏற்றுக்கொள்வார். | 03 | • ஆசிரியர் செய்துகாட்டல் மூலம் 1ஆம், 2ஆம் கற்றற் பேறுகளையும் விளக்கப்படம் அல்லது காணொளிகளை பயன்படுத்தி கலந்துரையாடல் மூலம் 3ஆம் கற்றற்பேறையும் வீட்டில் ஒப்படையை தயாரிக்கச் செய்தல் மூலம் 4 ஆம் கற்றற்பேறையும் அடையச்செய்வதில் வசதியளித்தல். |
| | 1.2 விலங்குக்கூட்டங் களின் இயல்புகளை பரீட்சிப்பார். | • விலங்குகளின் பாகுபாடு<br>• முள்ளந்தண்டிலிகளின் பிரதான கூட்டங்கள்<br>• முள்ளந்தண்டுளிகளின் பிரதான கூட்டங்கள் | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. முள்ளந்தண்டிலிக் கூட்டத்தின் விலங்குகளுக்கு உதாரணங்களைக் கூறி, பொருத்தமான மாதிரிகள் சிலவற்றைச் சேகரிப்பார்.<br>(சீலந்தரேற்றுக்கள்,அனலிட்டுக்கள்,மொலஸ்காக்கள், ஆத்திரப்போடாக்கள்)<br>2. முள்ளந்தண்டுளிக் கூட்டத்தின் விலங்குளுக்கு சில உதாரணங்களைக கூறி பொருத்தமான மாதிரிகள் சிலவற்றைச் சேகரித்துப் பெயரிடுவார்.<br>(பிஸஸ் / மீன்கள், அம்பிபியன்கள் / ஈரூடகவாழிகள், ரெப்ரீலியா/ நகருயிர்கள், ஆவேஸ்/ பறவைகள், | 03 | • உண்மை மாதிரிகள் படங்கள் காணொளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கற்றற்பேறுகளை அடையச்செய்வதில் வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மமேலியா/முலையூட்டிகள்)<br>3. புறவியல்புகளைப் பயன்படுத்தி தரப்பட்ட முள்ளந் தண்டிலிகளைப் பிரதான கூட்டங்களாகப் பாகுபடுத்துவார்.<br>4. புறவியல்புகளைப் பயன்படுத்தி தரப்பட்ட முள்ளந்தண்டுகளை பிரதான கூட்டங்களாகப் பாகுபடுத்துவார்.<br>5. முள்ளந்தண்டிலிகள், முள்ளந்தண்டுளிகள் ஆகியவற்றின் பல்வகைமையை மெச்சுவார். | | |
| | 1.3 தாவரங்களின் அடிப்படைத் தொழிற்பாடுகளை விபரிப்பார். | • தாவரப் பகுதிகளின் அடிப்படைத் தொழில்கள்<br>• தாவர இலைகளின் அடிப்படைத் தொழில்கள்<br>• தாவர இலைகளின் வேறு தொழில்கள்<br>• தாவர இலைகளின் பல்வகைமை<br>• தாவரத் தண்டுகளின் அடிப்படைத் தொழில்கள்<br>• தாவரத் தண்டுகளின் வேறு தொழில்கள்<br>• தாவரத் தண்டுகளின் பல்வகைமை<br>• தாவர வேர்களின் அடிப்படைத் தொழில்கள்<br>• தாவர வேர்களின் வேறு தொழில்கள்<br>• தாவர வேர்களின் பல்வகைமை | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. தாவரம் ஒன்றின் பிரதான பகுதிகளைத் தேடி ஆராய்ந்து, அவற்றை வரைவார்.<br>2. தாவரம் ஒன்றின் பிரதான பகுதிகளின் அடிப்படைத் தொழில்களை விபரிப்பார்.<br>3. பல்வகைமைக்கு இட்டுச் செல்லும் தாவரங்களின் இசைவாக்கங்களை விளக்குவார்.<br>4. தாவரத்தின் பிரதான பகுதிகள் தமது தனித்துவமான தொழில்களை ஆற்றுவதற்காக அடைந்துள்ள இசைவாக்கங்கள் தொடர்பாகச் சூழலைத் தேடி ஆய்வார்.<br>5. தனித்துவமான இசைவாக்கங்களைக் காட்டும் தாவர இலைகள், தண்டுகள், வேர்கள் ஆகியவற்றைச் சேகரித்து வரைவார்.<br>6. பொருத்தமான தகவல்களுடன் பாதுகாக்கப்பட்ட தாவர மாதிரிகளின் சேகரிப்புக்களைத் தயார்ப்படுத்துவார்.<br>7. தாவரங்களின் வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் பல்வகைமையை மெச்சுவார்.<br>8. சூழல் பற்றிய தேடி ஆய்தலின்போது சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் மிகக் குறைந்தளவில் இருக்கக்கூடியதாக தொழிற்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார். | 03 | • பாடத்தை ஆரம்பிக்கும் முன்னரே தாவர இலைகள், தண்டுகள், வேர்கள் என்பவற்றின் பல்வகைமையை தேடி ஆராய்ந்து ஒப்படையை வீட்டில் செய்யும்படி மாணவர்களை அறிவுறுத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1.4 மனித கழித்தற் தொகுதி பற்றித் தேடி ஆய்வார். | • மனிதனின் கழித்தல் அங்கங்களும், கழிவுகளும்<br>• சிறுநீரகங்கள் - சிறுநீர்<br>• நுரையீரல்கள் - காபனீரொட்சைட்டு<br>• தோல் - வியர்வை<br>• சிறுநீர்த் தொகுதியின் பகுதிகள்<br>• சிறுநீரகம்<br>• கட்டமைப்பு<br>• அமைவிடம் | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. கழிவகற்றல் என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுவார்.<br>2. மனித உடலின் கழித்தலங்கங்களையும் கழிவுப்பொருட்களையும் பெயரிடுவார்.<br>3. மனித சிறுநீர்த் தொகுதியின் பிரதான பகுதிகளை வரைந்து பெயரிடுவார்.<br>4. சிறுநீரகங்களின் கட்டமைப்பையும் அமைவிடத்தையும் விபரிப்பார்.<br>5. சிறுநீரகங்களில் ஏற்படும் பாதிப்புகளுக்கான காரணங்களையும் பாதுகாப்பு முறைகளையும் குறிப்பிடுவார்.<br>6. கழிவகற்றும் தொகுதியின் முழுமையான தொழிற்பாட்டிற்கு ஆரோக்கியமான வாழ்க்கைப் பாங்கைப் பேணுவதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார். | 02 | • மாதிரி உருக்கள் விளக்கப் படங்கள், குருகுலப் பாடங்கள் என்பவற்றை கலந்துரையாடுவதன் மூலம் கற்றற்பேறுகளை அடையச்செய்வதில் வசதியளித்தல். |
| | 1.5 மனிதநரம்புத் தொகுதி பற்றித் தேடி ஆய்வார். | • மனிதனின் நரம்புத்தொகுதி<br>• நரம்பு இயைபாக்கம்<br>• மைய நரம்புத் தொகுதியின் பிரதான பகுதிகள்<br>• சுற்றயல் நரம்புத் தொகுதி | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. நரம்பு இயைபாக்கம் என்றால் என்ன என்பதைக் கலந்துரையாடுவார்.<br>2. மனிதனின் மைய நரம்புத்தொகுதியின் பிரதான பகுதிகளை இனங்காண்பார்.<br>3. மைய நரம்புத்தொகுதி எவ்வாறு பாதுகாக்கப் பட்டுள்ளது என்பதை விபரிப்பார்.<br>4. சுற்றயல் நரம்புத்தொகுதி என்றால் என்ன என்பதை விபரிப்பார்.<br>5. மனித உடலினுள் கணத்தாக்கங்கள் எவ்வாறு கடத்தப்படுகின்றது என்பதை காட்டுவதற்குரிய எளிய செயற்பாடொன்றை மேற்கொள்வார்.<br>6. நரம்புத்தொகுதி மிக நொய்மையானதாகையால் அன்றாடச் செயற்பாடுகளின்போது நரம்புத் தொகுதியின் பாதுகாப்புக்கு தேவையானவற்றைப் பின்பற்றுதலின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார். | 02 | • மாதிரி உருக்கள் விளக்கப் படங்கள், குருகுலப் பாடங்கள் என்பவற்றை கலந்துரையாடுவதன் மூலம் கற்றற்பேறுகளை அடையச்செய்வதில் வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1.6 மனிதத் தோலின் கட்டமைப்புக்கும் தொழிலுக்கும் இடையான தொடர்புடைமை களைப் பரீட்சிப்பார். | • மனிதத் தோலின் அடிப்படைக் கட்டமைப்பு<br>• மனிதத் தோலின் அடிப்படைத் தொழில்கள் | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. மனிதத் தோலின் பிரதான தொழில்களை விபரிப்பார்.<br>2. மனிதத் தோலின் புறவுரு வரைபடத்தை வரைந்து பிரதான பகுதிகளைப் பெயரிடுவார்.<br>3. தோலின் மீது மேற்கொள்ளும் சில சிகிச்சைகள், அவற்றின் விளைவுகள் பற்றிய தகவல்களை சேகரிப்பார்.<br>4. தோலின் ஆரோக்கியத்தைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார்.<br>5. தோலிற்கு தேவையற்ற விதத்தில் சிகிச்சைகள் அளிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார். | 02 | |
| | 1.7 சூழலில் தாவரங் களின் நிலவு கைக்கும், தாவரங்களின் நன்மைக்கும் உதவும் சில தாவரச் செயன் முறைகளை ஆராய்வார். | • தாவரங்களில் பதார்த்தங்கள் கொண்டு செல்லலில் பங்களிப்புச் செய்யும் பொறிமுறைகள்<br>• பிரசாரணம்<br>• பரவல்<br>• தாவரங்களில் நடைபெறும் சில செயன்முறைகள்<br>• கொண்டு செல்லல் (நீர், கனியுப்புக்கள், உணவு)<br>• ஆவியுயிர்ப்பு<br>• செயன்முறை<br>• ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்கு தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்கள்<br>• ஆவியுயிர்ப்பின் முக்கியத்துவம்<br>• கசிவு<br>• ஒளித்தொகுப்பு | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. பரவல், பிரசாரணம் ஆகியவற்றைச் செய்து காட்டுவதற்குரிய எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>2. தாவரங்களின் கொண்டு செல்லலின் முக்கிய முறைகளாக பரவல், பிரசாரணம் ஆகியவற்றை விபரிப்பார்.<br>3. நீரின் கொண்டு செல்லல் தொழிற்பாட்டை காட்ட எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>4. கரையும் கனிப்பொருட்கள், உணவுப் பதார்த்தங்கள் ஆகிய தாவரங்களின் கடத்தும் தொகுதிகளினூடு கொண்டு செல்லப்படுவதைப் பொருத்தமான உதாரணங்களுடன் விபரிப்பார்.<br>5. தாவரங்களின் நிலவுகைக்கு கொண்டு செல்லல் முக்கியமானது என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>6. ஆவியுயிர்ப்புச் செயன்முறையைக் காட்டுவதற்குரிய எளிய செயற்பாடுகளை ஒழுங்கமைத்துச் செய்து காட்டுவார்.<br>7. ஆவியுயிர்ப்பை இழிவளவாக்குவதற்கு தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்களை ஆராய்ந்து | 05 | • ஆசிரியர் செய்து காட்டல் மூலம் 1ஆம், 3ஆம், 6ஆம் கற்றற்பேறுகளை அடையச் செய்வதற்கு வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | • மூலப்பொருள்கள்<br>• விளைபொருள்கள்<br>• முக்கியத்துவம் | பொருத்தமான உதாரணங்களுடன் அறிக்கைப்படுத்துவார்.<br>8. ஆவியுயிர்ப்பின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வார்.<br>9. ஆவியுயிர்ப்பிற்கும் கசிவிற்கும் இடையான வேறுபாடுகளை எடுத்துரைப்பார்.<br>10. ஒளித்தொகுப்பின் பிரதான விளைபொருளையும் பக்க விளைபொருளையும் காட்டுவதற்குரிய எளிய பரிசோதனைகளை மேற்கொள்வார்.<br>11. சொற் சமன்பாடு மூலம் ஒளித்தொகுப்புச் செயன்முறையை விபரிப்பார்.<br>12. ஒளித்தொகுப்பின் பூகோள முக்கியத்துவம் பற்றிய திரட்டிய அறிக்கையொன்றைத் தயாரிப்பார்.<br>13. உயிருலகின் நிலவுகைக்கு ஒளித்தொகுப்பின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வார். | | |
| | 1.8 உயிரங்கி யொன்றின் வாழ்க்கைச் சக்கரத்தை அவதானித்து விளங்கிக் கொள்வார். | • உயிரங்கியொன்றின வாழ்க்கைச்சக்கரம்<br>• தாவரம்<br>• விலங்கு<br>• வெவ்வேறு வகையான வாழ்க்கைச் சக்கரங்கள்<br>• உருமாற்றத்தைக் காட்டும் வாழ்க்கைச் சக்கரம்<br>• உருமாற்றத்தைக் காட்டாத வாழ்க்கைச் சக்கரம்<br>• வாழ்க்கைச் சக்கரத்தின் பொருளாதாரப் பெறுமதி | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. ஒவ்வொரு அங்கியும் தம் ஆயுட்காலத்தில் வாழ்க்கைச் சக்கரம் ஒன்றைப் பூர்த்தி செய்கின்றன என்பதை வரிப்படங்கள் மூலம் விபரிப்பார்.<br>2. மனிதன், வண்ணத்துப்பூச்சி என்பனவற்றின் வாழ்க்கைச் சக்கரங்களை ஒப்பிட்டு விபரிப்பார்.<br>3. "உருமாற்றம்" எனும் பதத்தை விபரிப்பார்.<br>4. உருமாற்றத்தைக் காட்டும் வாழ்க்கைச் சக்கரம் (தவளை) உருமாற்றத்தைக் காட்டாத வாழ்க்கைச் சக்கரம் ஆகியவற்றிற்கு உதாரணங்கள் தருவார்.<br>5. நிறையுருமாற்றம், குறையுருமாற்றம் என்பவற்றை வேறுபடுத்துவார்.<br>6. நிறையுருமாற்றம், குறையுருமாற்றம் ஆகியவற்றிற்கு உதாரணங்களைத் தருவார்.<br>7. பூக்குந் தாவரமொன்றின் வாழ்க்கைச் சக்கரத்தை வரிப்படம் மூலம் விபரிப்பார்.<br>8. பீடைகளின் வாழ்க்கைச் சக்கரத்தின் வெவ்வேறு பருவங்களை இனங்கண்டு, அவற்றை | 04 | • வரைபடங்கள், குருகுலப் பாடங்கள், காணொளிகள் என்பவற்றை கலந்துரையாடுவதன் மூலம் கற்றற்பேறுகளை அடையச்செய்வதில் வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவார்.<br>9. பீடைகளை வினைத்திறனுடன் கட்டுப்படுத்துவதற்கு அவற்றின் வாழ்க்கைச் சக்கரத்தின் வெவ்வேறு பருவங்களைப் பயன்படுத்தும் முறைகளை மெச்சுவார்.<br>10. உயிர்ப்பல்வகைமையைப் பேணுவதற்காக வாழ்க்கைச் சக்கரத்தின் உணர்திறன் மிக்க பருவங்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மெச்சுவார். | | |
| | 1.9 உணவு நற்காப்புச் செய்தல் மற்றும் உணவு பதனிடல் தொழினுட்பங்கள் பற்றிய அறிவினை தமது உணவுப் பொருட்களின் நுகர்வின் போது கருத்தில் கொள்வார். | • நற்காப்பு செய்யப்பட்ட உணவு<br>• பதனிடப்பட்ட உணவு | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. உணவு நற்காப்புச் செய்தல் என்றால் என்ன என்பதை விபரிப்பார்.<br>2. உணவு நற்காப்புச் செய்தலின் அவசியம் பற்றி விளக்குவார்.<br>3. நற்காப்பு செய்யப்பட்ட உணவுகள், நற்காப்பு செய்யப்படாத உணவுகள் ஆகியவற்றிற்கு உதாரணங்கள் தருவார்.<br>4. பதனிடப்பட்ட உணவுகளுக்கு உதாரணங்கள் தருவார்.<br>5. உணவு நற்காப்புச் செய்யும் பாரம்பரிய மற்றும் நவீன தொழினுட்ப முறைகளைப் பட்டியல் படுத்துவார்.<br>6. உணவு நற்காப்புச் செய்யும் முறைகளின் பின்னணியிலுள்ள தத்துவங்களை விளக்குவார்.<br>7. கிடைக்கக்கூடிய உணவுகளை நற்காப்புசெய்வார்.<br>8. நற்காப்பு செய்யப்பட்ட உணவுகள், பதனிடப்பட்ட உணவுகள் ஆகியவற்றின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களைப் பட்டியல்படுத்துவார்.<br>9. பதனிடப்பட்ட உணவைக் கொள்வனவு செய்ய முன் உணவு பொதியிடப்பட்ட சுட்டித்துண்டில் அச்சிடப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வார். | 03 | • முன்மொழியப்பட்ட உணவு நற்காப்பு செயன்முறைகளை ஒப்படையாக வீட்டில் செய்யும்படி மாணவர்களை அறிவுறுத்தல். |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 2.0 வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்துவதற்கு சடப்பொருள்கள், சடப்பொருள்களின் இயல்புகள் ஆகியவற்றுக்கு இடையிலுள்ள இடைத்தாக்கங்கள் என்பவற்றை ஆராய்வார். | 2.1 சடப்பொருள்களின் தொடர்ச்சியற்ற தன்மையை ஆராய்வார். | • சடப்பொருளின் துணிக்கை/ தொடர்ச்சியற்ற தன்மை<br>• (பண்பறிரீதியாக) துணிக் கைத் தன்மையின் அடிப்படையில் சடப்பொருள்களின் பௌதிக இயல்புகள்.<br>• வடிவம்<br>• கனவளவு<br>• நெருக்கக்கூடிய தன்மை<br>• அடர்த்தி<br>• சடப்பொருள்களின் மூவித நிலைகளில் துணிக்கை களின் ஒழுங்கமைப்பிலும் அசைவிலும் உள்ள வேறுபாடுகள். | **இப்பாட அலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. திண்ம, திரவ, வாயு நிலைகளின் துணிக்கைத் தன்மையை காட்டுவதற்கு எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>2. சடப்பொருள்களின் தொடர்ச்சியற்ற தன்மைக்கு ஆதாரமாக உள்ள உதாரணங்களைப் பட்டியல் படுத்துவார்.<br>3. சடப்பொருள்களின் மூவித நிலைகளில் துணிக்கைகளின் ஒழுங்கமைப்பை வரிப்படம் மூலம் எடுத்துக் காட்டுவார்.<br>4. சடப்பொருள் மிகச் சிறிய துணிக்கைகளினால் ஆக்கப்பட்டது என்பதைக் குறிப்பிடுவார்.<br>5. திண்மம், திரவம், வாயு ஆகியவற்றின் இரு பௌதிக இயல்புகளான வடிவம், கனவளவு ஆகியவற்றை விளக்குவார்.<br>6. அடர்த்தி, நெருக்கக்கூடிய தன்மை என்பன சடப்பொருள்களின் ஏனைய இரு பௌதிக இயல்புகளென அறிமுகப்படுத்துவார்.<br>7. குறிப்பிடப்பட்ட பௌதிக இயல்புகளின் அடிப்படையில் திண்மம், திரவம், வாயு ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடுகளை ஒப்பிடுவார்.<br>8. அன்றாட வாழ்க்கையில் சடப்பொருட்களின் துணிக்கைத் தன்மையின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார்.<br>9. சடப்பொருள்களின் தன்மையை விளங்கிக் கொள்வதற்கு விஞ்ஞானிகளால் ஆக்கப்பட்ட தர்க்க ரீதியான முறைகளை மெச்சுவார். | 08 | • ஆசிரியர் செய்து காட்டல் மூலம் 1ஆம், 5ஆம், 6ஆம் கற்றற்பேறுகளை அடையச் செய்வதற்கு வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2.2 அன்றாட வாழ்க்கையில் சடப்பொருள்களின் பௌதிக இயல்புகள் எந்த அளவுக்கு பயன்படுத்தப்பட வேண்டி இருக்கிறது என்பதை ஆராய்வார். | • சடப்பொருள்களின் பௌதிக இயல்பு.<br>• மினுமினுப்பு<br>• நிறம்<br>• இழையமைப்பு<br>• கடினத்தன்மை<br>• மீள்தன்மை<br>• மணம்<br>• நொருங்கும் இயல்பு<br>• அடர்த்தி<br>• விரிவடையும் தன்மை<br>• கடத்துதிறன் (மின், வெப்பம்)<br>• வாட்டத்தக்க இயல்பு<br>• நீட்டத்தக்க இயல்பு<br>• கணீர் ஒலி எழுப்பும் தன்மை<br>• தூய பதார்த்தங்கள்<br>• மூலகங்கள்<br>• உலோகங்களும் அல்லுலோகங்களும்<br>• சேர்வைகள் | **இப்பாட அலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. பதார்த்தங்களை தூய பதார்த்தங்கள்,தூய்மையற்ற பதார்த்தங்கள் எனப் பாகுபடுத்துவார்.<br>2. மாற்றமடையாத அமைப்பைக் கொண்ட பதார்த்தங்கள் தூய பதார்த்தங்கள் எனக் கூறுவார்.<br>3. மேலும் பிரிக்கப்பட முடியாத தூய பதார்த்தங்கள் ஒரு மூலகமாகும் எனக் கூறுவார்.<br>4. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பதார்த்தங்களால் ஆக்கப்பட்ட தூய பதார்த்தங்கள் சேர்வைகள் எனக் கூறுவார்.<br>5. சடப்பொருள்களின் பௌதிக இயல்புகளைக் கண்டறிவதற்கான எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>6. வேறுபட்ட பதார்த்தங்கள், வேறுபட்ட பௌதிக இயல்புகளைக் கொண்டுள்ளன என்பதை கூறுவார்.<br>7. சில பதார்த்தங்களின் அடர்த்தி, கொதிநிலை, உருகுநிலை என்பவற்றை அவதானிப்பதற்காக எளிய செயற்பாடுகளை மேற்கொள்வார்.<br>8. தரப்பட்ட பதார்த்தங்களின் மின் கடத்துதிறனை அறிவதற்காக எளிய செயற்பாடுகளை வடிவமைத்து மேற்கொள்வார்.<br>9. தூய பதார்த்தங்களுக்கு அடர்த்தி, உருகுநிலை, கொதிநிலை போன்ற பௌதிக இயல்புகளுக்கு குறித்த மாறாப் பெறுமானம் உண்டு என்பதை குறிப்பிடுவார்.<br>10. தரப்பட்ட தூய பதார்த்தங்களை மூலகங்கள், சேர்வைகள் என பகுபடுத்துவார்.<br>11. தரப்பட்ட மூலகங்களை அவற்றின் பௌதிக இயல்புகளின் அடிப்படையில் உலோகங்கள், அல்லுலோகங்கள் என வகைப்படுத்துவார்.<br>12. அன்றாட வாழ்வில் பதார்த்தங்களின் பௌதிக இயல்புகள் பயனுள்ளவை என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>13. | 10 | • ஆசிரியர் செய்து காட்டல் மூலம் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் கற்றற்பேறுகளை அடையச் செய்வதற்கு வசதியளித்தல்.<br>• பதார்த்தங்களின் இழையமைப்பு, கடினத்தன்மை, மீள்தன்மை நொருங்குமியல்பு, அடர்த்தி, வாட்டத்தக்க இயல்பு, நீட்டத்தக்க இயல்பு, கணீர் ஒலி எழுப்பும் தன்மை ஆகிய பௌதீக இயல்புளை தேடி அறிவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2.3 சூழலில் சடப்பொருள்களில் ஏற்படும் மாற்றங்களைத் தேடியாய்வார். | • சடப் பொருட்களில் ஏற்படும் மாற்றங்கள்<br>• நிலைமாற்றத்துடன் தொடர்புடைய பௌதிக மாற்றங்கள்<br>• உருகுதல்<br>• ஆவியாதல்<br>• பதங்கமாதல்<br>• ஒடுங்குதல்<br>• உறைதல்<br>• இரசாயன மாற்றங்கள்<br>• இரசாயனத் தாக்கங் களுக்கான சான்றுகள்.<br>• நிறமாற்றம்<br>• வாயு வெளியேற்றம்<br>• வெப்பம்உறிஞ்சப்படல் / வெளிவிடப்படல்<br>• வீழ்படிதல்<br>• தாக்கிகளும் விளை பொருட்களும்<br>• திறந்த, மூடிய தொகுதிகள்<br>• திணிவுக்காப்பு விதி<br>• இரசாயன மாற்றங்களுக் கான பொதுவான உதாரணங்கள்<br>• தகனம்<br>• உலோகங்கள் மங்குதல்<br>• உலோக அரிப்பு<br>• இரும்பு துருப்பிடித்தல்<br>• இரும்பு துருப்பிடித் தலைத் தடுத்தல்<br>• நடுநிலையாக்கம் | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. சடப்பொருள்களில் ஏற்படும் மாற்றங்களைச் செய்து காட்டுவதற்கு எளிய செயற்பாடுகளை நடாத்துவார்.<br>2. சக்தி மாற்றத்தின் மூலம் சடப்பொருள்களின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் எனக் கூறுவார்.<br>3. தரப்பட்ட மாற்றங்களை பதார்த்தங்களின் கூறுகள் மாறாதுள்ளவை, மாறுபடுபவை என்ற அடிப்படையில் வகைப்படுத்துவார்.<br>4. பௌதிக மாற்றங்களின் போது பதார்த்தங்களின் கூறுகள் மாற்றமடையாது இருக்கும் என்பதனைக் கூறுவார்.<br>5. இரசாயன மாற்றங்களின் போது எப்போதும் வேறுபட்ட கூறுகளைக் கொண்ட புதிய பதார்த்தங்கள் உருவாகும் என்பார்.<br>6. நிலைமாற்றத்துடன் தொடர்பான பௌதிக மாற்றங்களை விளக்குவதற்கு எளிய செயற்பாடுகளை வடிவமைத்து நடத்துவார்.<br>7. இரசாயன மாற்றங்கள் நிகழ்ந்தமைக்கான சான்றுகளை எளிய செயற்பாடுகள் மூலம் காட்டுவார்.<br>8. தரப்பட்ட இரசாயன மாற்றம் ஒன்றின் தாக்கிகளையும் விளைவுகளையும் இனங்காண்பார்.<br>9. திறந்ததொகுதி, மூடியதொகுதி என்பவற்றை எளிய செயற்பாடுகள் மூலம் இனங்கண்டு விபரிப்பார்.<br>10. மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளில் பெறுபேறுகளின் அடிப்படையில் திணிவுக்காப்பு விதியைக் கூறுவார்.<br>11. தகனம் என்பது எரிபொருளிற்கும், தகனத் துணைக்கும் இடையிலான இரசாயனத் தாக்கம் என்பதனை விபரிப்பார்.<br>12. தீ முக்கோணியை விபரிப்பதுடன் தீயை ஏற்படுத்துவதற்கு பொருள்கள் எரிபற்றுநிலையை அடைய வேண்டும் என்பதனையும் விபரிப்பார். | 11 | • ஆசிரியர் செய்து காட்டல், கலந்துரை யாடல்கள் என்பவற்றின் மூலம் கற்றற்பேறுகளை அடையச் செய்வதற்கு வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 13. தகனத்தின்போது காபனீரொட்சைட்டு, நீர் என்பன உற்பத்தியாகின்றன என்பதைக் காட்டுவதற்கு எளிய பரிசோதனை ஒன்றை வடிவமைத்து நடத்துவார்.<br>14. பூரண தகனத்திற்கும் குறை தகனத்திற்கும் இடையேயான வேறுபாடுகளைக் கூறுவார்.<br>15. மெழுகுதிரி, பன்சன் சுடரடுப்பு ஆகியவற்றின் சுவாலைகளின் வலயங்களைப் பெயரிடுவார்.<br>16. உலோகங்கள் மங்குதல், இரும்பு துருப்பிடித்தல் ஆகியன இரசாயன மாற்றங்கள் எனக் கூறுவார்.<br>17. துருப்பிடித்தலுக்கு அவசியமான காரணிகளை விளக்குவதற்கு எளிய பரிசோதனைகளை மேற்கொள்வார்.<br>18. இரும்பு துருப்பிடித்தலைத் தடுப்பதற்கான முறைகளைக் கூறுவார்.<br>19. அன்றாட வாழ்வில் இரும்பாலான பொருட்கள், துருப்பிடிப்பதை தடுப்பதற்கான முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்.<br>20. இரும்பு துருப்பிடிப்பதால் பாரிய பொருளாதாரச் சேதம் ஏற்படுவதனையும் அதனைத் தடுப்பதற்கான முறைகள் அவசியம் எனவும் ஏற்றுக்கொள்வார்.<br>21. அமிலங்கள், காரங்களினால் நடுநிலைப்படுத் தப்படும் அதேபோல் காரங்கள், அமிலங்களினால் நடுநிலைப்படுத்தப்படும் என்பார்.<br>22. பொருத்தமான காட்டிகளின் உதவியுடன் நடுநிலையாக்கல் தாக்கத்தை நிகழ்த்துவார்.<br>23. அன்றாட வாழ்வில் நடுநிலையாக்கல் தத்துவத்தினை பின்பற்றும் சந்தர்ப்பங்களுக்கு உதாரணம் கூறுவார்.<br>24. அன்றாட வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை பௌதிக மாற்றங்கள், இரசாயன மாற்றங்கள் என வகைப்படுத்துவார். | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3.0 வினைத் திறனையும் விளைதிறனையும் உச்ச மட்டத்தில் பேணும் வகையில் வெவ்வேறு சக்திகள், சடப்பொருளுடன் காட்டும் இடைத் தாக்கங்களையும் சக்தி நிலை மாற்றங்களையும் பயன்படுத்துவார் | 3.1 ஒலியைப் பிறப்பிப்பதில் விழிப்புணர்வை விருத்தி செய்வார்.<br><br>3.2 தேவையான ஒலிகளைப் பிறப்பிப்பதற்கு எளிய கருவிகளை உருவாக்குவார். | • ஒலியைப் பிறப்பித்தல்<br>• அதிர்வு மூலம் ஒலியைப் பிறப்பித்தல்.<br>• இழைகள், கோல்கள்<br>• மென்சவ்வுகள் / விதானம்<br>• வளிநிரல்கள் | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. எளிய ஒலி பிறப்பிக்கும் உபகரணங்களை இசைத்து மூன்று வகையான ஒலி முதல்களை இனங்காண்பார்.<br>2. இழை அல்லது கோல்கள், மென்சவ்வு / விதானம், வளிநிரல்கள் அதிர்வடைந்து ஒலியைப் பிறப்பிக்கும் கருவிகளுக்கு உதாரணங்களைத் தருவார்.<br>3. இழை அல்லது கோல், மென்சவ்வு, வளிநிரல் ஆகியவை அதிர்வடைவதனால் அனைத்து இயற்கையான, செயற்கையான ஒலிகள் பிறப்பிக்கப்படுகின்றன என்பதை விபரிப்பார்.<br>4. எளிய செயற்பாட்டின் மூலம் எல்லா அதிர்வுகளும் மனிதக் காதினால் கேட்கக்கூடிய ஒலியைப் பிறப்பிப்பதில்லை என்பதைக் காட்டுவார்.<br>5. இசைக்கவையின் நீளத்திற்கேற்ப பிறப்பிக்கப்படும் ஒலிகள் வேறுபடும் என்பதை இனங்காண்பார்.<br>6. இசை ஒலிக்கும் இரைச்சலுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குவார்.<br>7. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இசை ஒலியின் பங்களிப்பை மெச்சுவார். | 03 | • 6ஆம், 7ஆம் கற்றற்பேறுகள் முன்னைய பாடத்திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.<br><br>• ஆசிரியர் செய்து காட்டல், கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் கற்றற்பேறுகளை அடையச் செய்வதற்கு வசதியளித்தல். |
| | 3.3 காந்தங்களின் பயனுள்ள உபயோகங்களின் அனுபவத்தைப் பெறுவார். | • காந்தங்கள்<br>• நிலையான காந்தம்<br>• காந்த முனைவுகள்<br>• சட்டக் காந்தத்தின் காந்தப்புலம்<br>• நிலையான காந்தத்தின் பிரயோகங்கள்<br>• புவிக்காந்தமும் திசையறிகருவியும் | **இப்பாட அலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. சட்டக் காந்தத்தைச் சூழக் காந்தப்புலம் தொழிற்படுகிறது என்பதை காட்டுவதற்கு பல்வேறு முறைகளைப் பயன்படுத்துவார்.<br>2. காந்தத்தைச் சூழ காந்தவிசை பரந்துள்ள பிரதேசம், காந்தப்புலம் என்பதைச் சுருக்கமாக விபரிப்பார்.<br>3. புவிக்காந்தம் என்றால் என்ன என்பதை விபரிப்பார்.<br>4. காந்தப்புலத்தின் திசையை அறிவதற்கு திசையறி கருவி ஒன்றை ஓர் உபகரணமாக பயன்படுத்த முடியும் என்பதை விபரிப்பார்.<br>5. புவி வடக்கிற்கும், காந்த வடக்கிற்கும் இடையே வேறுபாடு உள்ளதைக் கூறுவார்.<br>6. வருடல் முறை மூலமாகவும், மின்முறை மூலமாகவும் நிரந்தரக் காந்தங்களை உருவாக்கும் எளிய செயற்பாடுகளில் ஈடுபடுவார். | 04 | • 1ஆம், 4ஆம், 7ஆம் கற்றற்பேறுகள் முன்னைய பாடத்திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.<br><br>• ஆசிரியர் செய்து காட்டல், கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் கற்றற்பேறுகளை அடையச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 7. நீண்டகாலத்திற்கு காந்த இயல்பை தக்கவைத்துக் கொள்ளும் திரவியங்களைப் பயன்படுத்தி நிரந்தரக் காந்தமொன்றை உருவாக்க முடியும் என்பதை விளக்குவார்.<br>8. நிரந்தரக் காந்தங்களை உருவாக்குவதற்கு உருக்கு பொருத்தமான திரவியம் என்பதையும், தற்காலிக காந்தங்களை உருவாக்குவதற்கு மென்னிரும்பு பொருத்தமான திரவியம் என்பதையும் கூறுவார்.<br>9. காந்தங்களை பயன்படுத்தவும், பேணவும் பொருத்தமான முறைகளை ஏற்றுக் கொள்வார்.<br>10. நிலையான காந்தங்களின் பிரயோகங்களுக்கு உதாரணங்களை முன்வைப்பார். | | செய்வதற்கு வசதியளித்தல். |
| | 3.4 ஓட்ட மின்னியலுடன் தொடர்பான அடிப்படைக் கணியங்களையும் அக்கணியங்களைப் பொருத்தமான கருவிகளைப் பயன்படுத்தி அளவிடுவதிலும் விழிப்புணர்வை விருத்தி செய்வார். | • ஓட்ட மின்னியலுடன் தொடர்புடைய கணியங்களும், அவற்றை அளவிடுதலும்.<br>• அழுத்தம் (வோல்ற்றளவு)<br>• மின்ஓட்டம்<br>• தடை | **இப்பாட அலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. பொருத்தமான உதாரணங்கள் மூலம் மின்னழுத்தத்தை விளக்குவார்.<br>2. அழுத்தவேறுபாட்டை வோல்ற்றளவு என விளக்குவார் (Voltage)<br>3. அழுத்தத்தின் அலகு வோல்ட் (volt / V) என கூறுவார்.<br>4. மின்சுற்று ஒன்றில் திருத்தமாக வோல்ற்றுமானியை பயன்படுத்தி இரண்டு புள்ளிகளுக்கிடையேயான மின்னழுத்தத்தை அளவிடுவார்.<br>5. உயர் மின்னழுத்தத்தில் இருந்து தாழ் மின்னழுத்தத்தை நோக்கி மின் ஓட்டம் பாயும் என்பதை விபரிப்பார்.<br>6. மின் ஓட்டத்தின் திசை நேர் முடிவிடத்திலிருந்து மறைமுடிவிடம் நோக்கி இருக்குமென்பதைக் குறிப்பிடுவார்.<br>7. மின்ஓட்டத்தின் அலகு அம்பியர் (A) எனக் குறிப்பிடுவார்.<br>8. மின்சுற்று ஒன்றில் குறித்த புள்ளியினூடாகப் பாயும் மின்ஓட்டத்தை அம்பியர்மானியைப் பயன்படுத்தித் திருத்தமாக அளவிடுவார். | 03 | • மாணவர்கள் வோல்ற்றுமானி, அம்பியர்மானி என்பவற்றைப் பயன்படுத்தி ஏற்கனவே அளவீடுகளைப் பெற்றுள்ளதால் ஆசிரியர் செய்து காட்டல், கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் கற்றற்பேறுகளை அடையச் செய்வதற்கு வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 9. கடத்தியினூடாகப் பாயும் மின்லோட்டத்தை எதிர்க்கும் இயல்பு தடை என விளக்குவார்.<br>10. தடையின் அலகு ஓம் (Ω) என்பதை கூறுவார்.<br>11. மின் கணியங்களைத் திருத்தமாக அளவிடுவதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார். | | |
| | 3.5 அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளில் எளிய மின் உபகரணங்களை விளைதிறனுடன் பயன்படுத்துவார். | • மின்கலங்களினதும் மின்குமிழ்களினதும் இணைப்பு<br>• தொடர்<br>• சமாந்தரம்<br>• எளிய மின்சுற்று<br>• மின்சூள்<br>• ஒளி அலங்காரங்கள்<br>• வீட்டுச் சூழலில் மின் உபகரணங்களின் பாதுகாப்பானதும் இலாபகரமானதுமான பயன்பாடு<br>• மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்தும் கூறுகள்<br>• ஆளிகள்<br>• நிலையான தடையிகள்<br>• மாறும் தடையிகள்<br>• இறையோதைற்று<br>• ஒளிஉணர்தடையி(LDR) | **இப்பாடஅலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. தரப்பட்ட மின்சுற்று வரிப்படங்களைப் பயன்படுத்தி எளிய தொடர், சமாந்தர மின்சுற்றுக்களை அமைப்பார்.<br>2. தொடர், சமாந்தர சுற்றுக்களில் ஏற்படும் அவதானங்களை விளக்குவார்.<br>3. மின்சூள் ஒன்றின் சுற்று வரிப்படத்தை வரைவார்.<br>4. மின்சுற்று பூரணப்படுத்தப்பட்டிருக்கும் போது மாத்திரமே மின்குமிழ் ஒளிரும் என்பதைக் கூறுவார்.<br>5. தரப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பொருத்தமான ஒளி அலங்கார சுற்றுக்களைக் கட்டியெழுப்புவார்.<br>6. மின்சுற்று அமைக்கும் கருவிகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவார்.<br>7. மின்சுற்றொன்றில் மின்னோட்டத்தைக் காட்சிப்படுத்தப் பொருத்தமான கட்டுப்படுத்தும் கூறுகளைப் பயன்படுத்துவார்.<br>8. வீட்டுச் சூழலில் மின் உபகரணங்களைப் பயன்படுத்தும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பட்டியலிடுவார்.<br>9. வீட்டில் பயன்படுத்தப்படும் மின் உபகரணங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து அதிலிருந்து வினைத்திறன், விளைதிறன் மிக்க உபகரணங்களைத் தெரிவு செய்வார். | 05 | • ஆசிரியர் செய்து காட்டல் மூலம் முதல் நான்கு கற்றற் பேறுகளையும் வீட்டில் செய்யப்படும் ஒப்படை மூலம் அறுதிக் கற்றற்பேறையும் அடையச் செய்வதற்கு வசதியளித்தல்.<br>• தேர்ச்சி மட்டம் 3.6 முற்றாக நீக்கப்பட்டுள்ளது. |
| 4.0 அறிவு பூர்வமான நீடித்த நிலைபேண் பயன்பாட்டிற்கு இயற்கைத் தோற்றப்பாடுகளை விளங்கிக் கொள்வதன் மூலம் | 4.1 ஞாயிற்றுத் தொகுதி விண்வெளி, விண்வெளி ஆய்வு பற்றிய தகவல்களைத் தேடி ஆய்வார். | • சூரியன், புவி, சந்திரன்<br>• புவிச்சுழற்சியும், புவிச் சுற்றுகையும்<br>• பருவகாலங்கள்<br>• சந்திரக்கலை | **இப்பாட அலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. புவியினதும் சந்திரனினதும் சுழற்சி மற்றும் சுற்றுகை ஆகியவற்றை விளக்குவதற்கு பல்வேறு வகையான மாதிரியுருக்களை நிர்மாணிப்பார்.<br>2. பருவகாலங்களின் நிகழ்வுகளை விபரிப்பதற்கு மாதிரியுருக்களைப் பயன்படுத்துவார்.<br>3. வரிப்படங்களின் மூலம் சந்திரகலைகளைத் காட்சிப்படுத்துவார். | 11 | • வீட்டில் செய்யப்படும் ஒப்படை மூலம் 1ஆம், 4ஆம், 6ஆம் கற்றற்பேறுகளை அடைவதற்கு வசதியளித்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புவியினதும், விண் வெளியினதும் தன்மை, இயல்புகள், நிகழ்வுகள் பற்றித் தேடி ஆய்வார். | 4.2 ஞாயிற்றுத் தொகுதி மற்றும் அவற்றுடன் தொடர்பான தோற்றப்பாடுகளைக் காட்டி விளக்குவதற்கான திறன்களை விருத்தி செய்வார். | • கிரகணங்கள்<br>• சந்திரகிரகணம்<br>• சூரியகிரகணம்<br>• சூரிய கோள்த் தொகுதி<br>• உடுத்தொகுதிகள்<br>• இராசி வட்டத்திலுள்ள உடுத்தொகுதிகள்<br>• ஏனைய உடுத்தொகுதிகள்<br>• விண்வெளி ஆய்வு<br>• செயற்கைச் செய்மதிகள் | 4. சந்திரகிரகணம், சூரியகிரகணம் என்பவற்றைக் காட்டி விளக்குவதற்கு மாதிரியுருக்களைப் பயன்படுத்துவார்.<br>5. சந்திரகிரகணம், சூரியகிரகணம் ஆகியவற்றின் நிகழ்வுகளைக் கதிர்ப்படங்கள் மூலம் விபரிப்பார்.<br>6. சூரிய கோள்த் தொகுதியை விபரிக்க பல்வேறு விதமான மாதிரியுருக்களை நிர்மாணிப்பார்.<br>7. பிரதான உடுத்தொகுதிகளை இனங்காண்பதுடன், சில உடுத்தொகுதியிலுள்ள முக்கிய உடுக்களைப் பெயரிடுவார்.<br>8. இரவு வானை அவதானிப்பதன் மூலம் கோள்களையும் உடுக்களையும் இனங்காண்பார்.<br>9. சூரியனின் தோற்ற இயக்கப்பாதையின் பின்னணியில் அமைந்துள்ள முனைப்பான பன்னிரண்டு உடுத்தொகுதிகளும் ஒருங்கே ஓரை வட்டம் (இராசிவட்டம்) எனக் கூறுவார்.<br>10. விண்வெளி ஆய்வு, செயற்கை செய்மதிகள் ஆகியன தொடர்பான தகவல்களைக் கவர்ச்சிகரமாக முன்வைப்பார்.<br>11. தொடர்பாடல் தொகுதியில் செயற்கை செய்மதிகளின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்வார்.<br>12. விண்வெளி ஆய்வுச் செயற்பாடுகள் யாவும் மனித இனத்தின் முன்னேற்றத்தை நோக்கியதே என்பதை ஏற்றுக் கொள்வார். | | • மாதிரி உருக்கள் வரைபடங்கள், ஆசிரியர் செய்துகாட்டல் என்பவற்றின் மூலம் ஏனைய கற்றற்பேறுகளை அடையச்செய்வதில் வசதியளித்தல். |
| | 4.3 இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான காலநிலை மாற்றங்களை விஞ்ஞான அடிப்படையில் ஆராய்வார். | • விஞ்ஞானஅடிப்படையில்<br>• வரட்சி<br>• வெள்ளப்பெருக்கு<br>• மண்சரிவு<br>• மின்னல் | **இப்பாட அலகின் மூலம் மாணவர்கள்,**<br>1. இயற்கை அனர்த்தங்களுக்கான (வரட்சி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு மற்றும் மின்னல்) காரணங்களை விபரிப்பார்.<br>2. இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புகளை இழிவளவாக்குவதற்கு எடுக்கக்கூடிய முன்னாயத்தங்களின் முக்கியத்துவங்களை ஏற்றுக்கொள்வார்.<br>3. இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புகளை | 03 | • முன்னைய பாடத்திட்டத்தின் 2ஆம் கற்றற்பேறு நீக்கப்பட்டுள்ளது.<br>• வரைபடங்கள், காணொளிகள் என்பவற்றைப் பயன்படுத்தி கலந்துரையாடி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | இழிவளவாக்குவதில் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வார். | | ஏனைய கற்றற்பேறுகளை அடையச் செய்வதில் வசதியளித்தல். |